செ.வெ.எண்: 86 நாள்: 29.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் பகிடிவதை (Anti-Ragging) தடுப்பது குறித்து புகார் அளிக்க 18001805522 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய்த்துறையின் சார்பில் பகிடிவதை தடுப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அரசு மற்றும் தனியார் துறை கல்வி நிறுவனங்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.08.2016) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

தமிழகம் முழுவதும் அனைத்து கல்லூரிகளிலும் இந்த கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று முடிந்துள்ளதையொட்டி தமிழகஅரசு பகிடிவதை தடுப்பது குறித்து மாவட்டந்தோறும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அனைத்து அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று நடததப்பட்டது. இக்கூட்டத்தில் பகிடிவதை குறித்து கல்லூரி, மாவட்டம் மற்றும் பல்கலைக்கழகங்கள் அளவிலான குழுக்கள் அமைத்து பகிடிவதை குறித்து மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தங்களது நிறுவனங்களில் விழிப்புணர்வு பதாகைகள் அமைக்க கல்வி நிறுவனங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். முதலாமாண்டு பயிலும் மாணவ, மாணவிகளை தனி விடுதியில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகள் எந்தவித தயக்கமுமின்றி சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனத்தினரிடம் தெரிவிக்க வேண்டும். அனைத்து நிறுவனங்களிலும் புகார் பெட்டி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் பகிடிவதை தொடர்பாக புகார் தெரிவிக்க 18001805522 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண்ணையும், இணையதளம் www.antiragging.in என்ற இணையதள முகவரியையும் அனைத்து கல்வி நிறுவனங்களை சேர்ந்த மாணவ, மாணவிகளின் அடையாள அட்டையின் பின்புறம் பதிவு செய்ய வேண்டும். பகிடிவதை குறித்து புகார் மனு வரும்பட்சத்தில் அந்த கல்வி நிறுவனங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, நமது மாவட்டத்தில் பகிடிவதை இல்லாமல் அனைத்து கல்வி நிறுவனங்களும் செயல்பட ஒத்தழைப்பு நல்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்ந ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரக அலுவலக மேலாளர் திரு.சுப்பையா, அனைத்து வட்டாட்சியர்கள், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவன அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**